
# உடன்பிறப்பே... 75

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எல்.பலராமன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# எல்.பலராமன் கடின உழைப்பாளி; களப்போராளி!

“கழகப் பணியாற்றுவதில் ஒவ்வொருவருக்கும் ஒரு பாணி இருக்கும். சிலர் பரபரப்பாகப் பணியாற்றுவார்கள்; சிலர் பதற்றமாகப் பணியாற்றுவார்கள்; சிலர் அமைதியாக வேலை பார்ப்பார்கள்; சிலரோ தாங்கள் வேலை பார்க்கிறோம் என்பதே தெரியாதது மாதிரி வேலை பார்ப்பார்கள். அத்தகைய திறமை சிலருக்கு மட்டும்தான் இருக்கும். அத்தகைய திறமைசாலியாக சென்னையில், கழகப் பணிகள் அனைத்தையும் அமைதியாக, அடக்கமாக நடத்தி முடிப்பவராக இருந்தவர், சகோதரர் எல்.பலராமன்”. 2020–ஆம் ஆண்டில், வடசென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பணியாற்றிய எல்.பலராமன் அவர்களின் மறைவின்போது, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில் போற்றிப் புகழ்ந்து இப்படிக் குறிப்பிட்டார்.

இப்போது, சென்னை மாவட்டக் கழகம் ஆறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்பு வடசென்னை, தென்சென்னை என்ற இரண்டு மாவட்டக் கழகங்களாகச் செயல்பட்டபோது, வடசென்னை பகுதி மிகப்பெரியது. அதனை ஒற்றை மனிதராக இருந்து தாங்கியவர், எல்.பலராமன்.

## கழகக் கோட்டை

தி.மு.கழகத்தைப் பொறுத்தவரை வடசென்னை என்பது மிக முக்கியமான மாவட்டம். கழகத்துக்கான அடித்தளம் அமைந்தது, வடசென்னையில்தான். குறிப்பாக, சென்னை மாநகரம் ‘தி.மு.கழகத்தின் கோட்டை’ என்பது கழகம் தொடங்கிய நாள் தொட்டே மக்களின் அன்பினால் சாத்தியமாகி இருந்தது. அதனைத் தக்கவைத்துக் கொள்வதும் மிக மிக முக்கியமானது. அந்த வகையில், எல்.பலராமன் அவர்கள், வடசென்னையைக் கழகத்தின் கோட்டையாகத் தக்கவைக்கக் காரணமாக இருந்தவர் என்றால், மிகையில்லை.

வடசென்னை, துறைமுகம் பகுதியில் பிறந்தவர் பலராமன். தொடக்கத்தில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் எனப் படிப்படியாக வளர்ந்து, வடசென்னை மாவட்டச் செயலாளராக உயர்ந்தவர். ஆனால், தனது இறுதிக் காலம் வரை வார்டு கவுன்சிலராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ ஆகவேண்டும், என அவர் நினைக்கவுமில்லை, முயற்சிக்கவுமில்லை. அதைப் பற்றிக் கவலைப்பட்டவரும் அல்ல, எனத் தலைவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பார்.

## துறைமுகத் தேனீ

கழகப் பணிகளில் எல்.பலராமன் அவர்களின் தீவிர உழைப்புக்குச் சான்றாகச் சொல்லக்கூடிய சம்பவம் 1991–ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தல். முத்தமிழறிஞர் கலைஞர், துறைமுகம் தொகுதியின் வேட்பாளர். தலைவர் அதற்கு முன், 1989–ஆம் ஆண்டில் துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டு வென்றிருந்தாலும், 1991–ஆம் ஆண்டு தேர்தல், கழகத்துக்கு மிகமிகச் சோதனையானது. முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுதாபமும், அதேநேரத்தில் கழகத்தின் மீது சுமத்தப்பட்ட பழிகளாலும் மிகப்பெரிய தோல்வியைக் கண்டிருந்தது. அந்தத் தேர்தலில் ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே கழகம் வென்றது. அது முத்தமிழறிஞர் கலைஞர் போட்டியிட்ட துறைமுகம் தொகுதி.

தலைவர் கலைஞர் அவர்கள் பெற்ற வெற்றி. அந்த வெற்றிக்காக அஞ்சாமல், துஞ்சாமல் பாடுபட்டவர், எல்.பலராமன் என்பது களம் அறிந்தவர்கள் சொல்லும் வரலாறு. அதேபோல, 1996, 2001 மற்றும் 2006–ஆம் ஆண்டுகளில் துறைமுகம் தொகுதியில் போட்டியிட்ட இனமானப் பேராசிரியரின் வெற்றிக்காகத் தேர்தல்களத்தில் பம்பரமாகச் சுழன்றவர் பலராமன்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் தேர்தல் பணிச்செயலாளரைப் போல் செயல்பட்டவர். அந்த வகையில், ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தின் தலைவரும், பொதுச் செயலாளரும் தேர்தலில் வெற்றி பெறப் பணியாற்றும் பெருமையைப் பெற்ற கழக முன்னணி நிர்வாகியாக விளங்கியவர் எல்.பலராமன்.

தலைவர் அவர்களோ, பேராசிரியர் அவர்களோ வேறு தொகுதியைத் தேர்வு செய்தால், அங்கு பலராமன் அவர்கள் போட்டியிடும் வாய்ப்புக் கூட ஏற்பட்டிருக்கும். ஆனால், அதனைப் பற்றிக் கவலைப்படாமல் களப்பணியாற்றுவார் என இன்றைய கழகத் தலைவர் அவர்கள் பலராமன் புகைப்படத் திறப்பு நாள் நிகழ்ச்சியில் குறிப்பிட்டார். தொடர்ந்து, 1976–ஆம் ஆண்டில், மிசாவில் கைது செய்யப்படுவதற்கு முன், வடசென்னை ஏழுகிணறு பகுதியில் பலராமன் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொண்ட நினைவுகளையும் பகிர்ந்திருந்தார், இன்றைய கழகத் தலைவர் அவர்கள்.

## கண் அசைவின் அம்பு

வடசென்னை மாவட்டத்தில் நடைபெறும் கழகப் பொதுக்கூட்டம் என்றால், அது தமிழ்நாட்டின் தலைப்புச் செய்தியாக இடம்பெறும். முத்தமிழறிஞர் கலைஞர் பங்கேற்ற பல பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்திக் காட்டியவர் பலராமன். கலைஞரின் கண் அசைவினைப் புரிந்துகொண்டு வில்லில் இருந்து விடுபடும் கணையாகக் களப்பணியாற்றியவர் என்பது கழகத்தினர் அவருக்கு அளிக்கும் சான்று.

வடசென்னை மாவட்டக் கழகத்தில் நடக்கின்ற ‘மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கக் கூட்டம்’ கழகத்தினர் உணர்வு கொள்வதற்கான பாடமாக, ஒவ்வொரு ஆண்டும் நடத்திக் காட்டியவர்.

மாவட்டச் செயலாளர் என்றாலும், சென்னை மாநகரின் முன்னணிக் களவீரர்களில் ஒருவர், என்றுதான் தன்னை நினைத்துக் கொள்வார். கழகம் அறிவித்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து நடத்திக் காட்டியதுடன், அதில் கலந்து கொண்டு சிறைசென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடசென்னையில் கலைஞர் கலந்து கொள்ளும் எந்தக் கூட்டமாக இருந்தாலும், ஒவ்வொரு முறையும் அந்தக் கூட்ட மேடையிலேயே, பலராமனை தனிப்பட்ட முறையில் தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டி விடுவார். “அவர் பலராமன் அல்ல; ‘பலேராமன்’’ என்பது தலைவர் கலைஞரின் பாராட்டுக் கல்வெட்டு.

## கழகத்தினரிடம் பேரன்பு

2001–ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டபோது, சிறைச்சாலைக் கதவுகளை பகல் இரவு என நேரம் பார்க்காமல் ஒரு காவல்காரரைப் போல் காவல்காத்தவர். அதே அன்புதான் கழக நிர்வாகிகள், தொண்டர்களிடமும். வீட்டுக்கு வரும் கழகத் தோழர்களுக்குத் தானே உணவு பரிமாறும் தாயன்பு கொண்டவர், என்கின்றனர் கழகத்தினர்.

2020–ஆம் ஆண்டு, ஜூன் 21–ஆம் தேதி, அவர் மறைந்தபோது கொரோனா தொற்று உச்சத்தில் இருந்தது. ஊரடங்கு நெருக்கடிகள் இருந்தன. ஆனாலும், அண்ணா அறிவாலயத்தில் அவரது புகைப்படத் திறப்பு நிகழ்ச்சியை நடத்தியது கழகம்.

“எல்லோரும் சட்டமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ ஆக முடியாது. சிலர்தான் ஆக முடியும். அதனைப் புரிந்துகொண்டு கழகத்துக்காகப் பணியாற்றும் எத்தனையோ பலராமன்கள் இருப்பதால்தான், இத்தனை ஆண்டுகள் கழகம் யாராலும் அசைக்கமுடியாத

**2001–ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டபோது, சிறைச்சாலைக் கதவுகளை பகல் இரவு என நேரம் பார்க்காமல் ஒரு காவல்காரரைப் போல் காவல்காத்தவர்.**

கற்கோட்டையாக இருக்கிறது. பலராமன், கடின உழைப்பாளி. கட்சிப் பணியோ, தேர்தல் பணியோ, மக்கள் பணியோ – அனைத்திலும் விறுவிறுப்புடன் களத்திற்கு வரும் அவர், போராட்டம் என்றால், போராளியாகவே மாறி, களத்தில் நிற்கும் தைரியசாலி.

முத்தமிழறிஞர் கலைஞர் மீது மட்டுமின்றி, என் மீதும் பாசத்தை அருவி போல் கொட்டிய அவரை – ஏன், ஒட்டுமொத்தமாக எங்கள் குடும்பத்தோடும்– கழகக் குடும்பங்களில் உள்ள அனைவரோடும் அன்பாகவும், பாசமாகவும் பழகக் கூடியவரை, கழகம் இழந்து நிற்கிறது. அவர் மறைந்தாலும்– அவரது பணிகளும், தியாகங்களும் மறையாது. கழகத்துக்காக உழைத்தவர்களை, கழகத்துக்காகப் பாடுபட்டவர்களை எந்தச் சூழ்நிலையிலும் நாம் மறந்துவிடக்கூடாது” என்று அன்று சூளுரைத்தார், கழகத் தலைவர். அந்தச் சூளுரை காலத்தால் அழியாது நிற்கும்.

...துடிக்கும்

## அதானிக்காக வரிந்து கட்டும் அரசு!

“இந்தியாவுக்கு எதிராக, அமெரிக்காவில் ராகுல் காந்தி பேசிவிட்டார்’’ என பா.ஜ.க. தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளதற்குப் பின்னணியில், அதானி குறித்த அக்கறையே உள்ளது என அரசியல் விமர்சகர்கள் சமூக வலைதளங்களில் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். பெகாசஸ் மென்பொருள் வழி எதிர்க்கட்சித் தலைவர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்பு விவகாரம், அதானி–ஹிண்டன்பர்க் விவகாரம் ஆகியவை தீப்போல் பற்றி எரிந்தபோதும், பா.ஜ.க.வினர் ராகுல்காந்திக்கு எதிராக இதே குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர். இப்போதும், அதே ஆயுதம்தான் பயன்படுகிறது, எனப் பதிவிட்டுள்ளார் அரசியல் விமர்சகர், பத்திரிகையாளர் பரகத் அலி.

“2023–ஆம் ஆண்டில் அதானி–ஹிண்டன்பர்க் விவகாரம் வெடித்ததைப் போல, இப்போதும் அதே ஹிண்டன்பர்க் விவகாரம் வெடித்திருக்கிறது. பங்குச் சந்தையில் உள்ள தனியார் நிறுவனங்களிடம் இருந்து, செபி தலைவர் மாதவி புச் வைத்திருக்கும் தனியார் ஆலோசனை நிறுவனம், பணம் பெற்றுள்ளதாக ஹிண்டன்பர்க் நிறுவனம் புதிய குற்றச்சாட்டை முன்வைத்திருக்கும் நிலையில், அதை மூடி மறைக்க, ராகுல் காந்தியின் உரையைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இந்தியா வந்த போது, அகமதாபாத்தில் குடிசைப் பகுதியை மறைக்க, அரை கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலையுடன் சேர்த்துத் தடுப்புச் சுவர் கட்டினார்கள். மக்களின் ஏழ்மை நிலையை, அமெரிக்க அதிபர் பார்க்கக்கூடாது என்பதற்காகப் பெரிய சுவரை எழுப்பினார்கள். தனக்கு அமெரிக்க விசா மறுக்கப்பட்டதும் “இந்தியாவுக்கே மானக்கேடு” எனச் சொன்ன மோடி, ஏழைகள் பகுதியைச் சுவர் கட்டி மறைத்தது இந்தியாவின் மானத்தை மறைக்கத்தானே?” எனக் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



மு.அகில் முத்தழகு



**தலைவரின் கைகளில் குழந்தையாக...**

1998–ஆம் ஆண்டு, எனது 2–வது வயதில் எனது தாத்தா குளித்தலை அ.சிவராமன் வீட்டிற்குச் சென்றிருந்தோம். மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தையொட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குளித்தலை பேருந்து நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றினார்கள். அந்த நிகழ்ச்சியில் எனது தந்தையார் க.முருகன் அவர்கள் எனது கைகளால் கலைஞர் அவர்களிடம் ரூ.1,001 கழக வளர்ச்சி நிதி அளிக்க வைத்தார். அந்த வயதில் கலைஞர் தாத்தாவுடன் போட்டோ எடுத்துக் கொண்டேன் என்று அனைவரிடமும் கூறுவேன். கலைஞர் அவர்களின் கை என்னைப் பிடித்திருக்கும். இந்தப் படத்தை எப்போது பார்த்தாலும், சிலிர்ப்பாக இருக்கும்.

**– மு.அகில் முத்தழகு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கழகத்தின் முதல் பொதுக்கூட்டம்!

1949–ஆம் ஆண்டு, செப்டம்பர் 18–ஆம் தேதி, தலைமைக் கழக அமைப்புப் பணிகளின் நியமனங்களுக்குப் பின்னர், அன்று மாலை 4 மணிக்கு, கழகத் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் தங்களது வேலைத் திட்டத்தினை அறிவிப்பதற்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டம் சென்னை, ராபின்சன் பூங்காவில் நடைபெற்றது. அந்த மைதானம் அதுவரை பார்க்காத அளவுக்கு ஒரு லட்சத்துக்கும் மேல் மக்கள் திரண்டு இருந்தனர். அதுதான் கழகத்தின் முதல் பொதுக்கூட்டம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

600

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131